திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் டி.தேசிங்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு வானகரம் அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அவரை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார் மேலும் மருத்துவர்களிடம் அவரது உடல் நிலை குறித்து கேட்டறிந்தார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், ஒன்றிய கழக செயலாளர் புஜ்ஜி முரளி கிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.சங்கர், ஜெ.மகாதேவன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் ஏ.ஜெ.பவுல், நிர்வாகிகள் என்.ராஜி, செல்லதுரை மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், "கழகத்தின் வேர்களைத் தேடி என்ற தலைப்பில், கழகத்தின் ஆணிவேராகத் திகழும் கிளைக் கழக நிர்வாகிகளை நேரில் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடும் நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதன் தொடர்ச்சியாக, பள்ளிப்பட்டு மத்திய ஒன்றியம் கர்லம்பாக்கம் கிளை கழக நிர்வாகிகளை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் அவர்களின் இல்லங்களிலே சந்தித்து கலந்துரையாடினார். உடன் ஒன்றிய செயலாளர் பிடி.சந்திரன் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முரளி சேனா, கிளைக் செயலாளர்கள் நிர்வாகிகள் உள்பட பலர் உள்ளனர்.

சமூக அடிப்படையிலான

சுற்றுலா மேம்பாட்டில் தமிழ்நாட்டுக்கு ரூ.390.74 கோடி ஒதுக்கீடு!

மக்களவையில் க.செல்வம் எம்.பி. எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசு தகவல்!

புதுடெல்லி, ஆக. 1

மக்களவையில் காஞ்சிபுரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் தமிழ்நாட்டில் சமூக அடிப்படையிலான சுற்றுலா மேம்பாடு, உள்ளூர் மக்களின் பங்களிப்பு, மகளிர் சுயஉதவிக் குழுக்கள், பழங்குடியினர் மற்றும் பாரம்பரிய கலைஞர்களுக்கு வழங்கப்பட்ட திட்டங்கள், நிதியுதவிகள் மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்து நட்சத்திர வினா எழுப்பினர். இதற்கு சுற்றுலாத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் பதிலளித்தார்.

அதற்கு அளிக்கப்பட்ட பதிலில், சுற்றுலாத் தலங்கள் மற்றும் சுற்றுலா தயாரிப்புகளின் மேம்பாடு முதன்மையாக மாநில அரசுகளின் பொறுப்பாக இருந்தாலும், ஸ்வதேஷ் தர்ஷன், பிரசாத் (PRASHAD), மத்திய முகமைகளுக்கான சுற்றுலா உள்கட்டமைப்பு உதவித் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் ஒன்றிய அரசு மாநிலங்களுக்கு நிதியுதவி வழங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், SwadeshDarshan2.0 திட்டத்தின் மூலம் நிலைத்தன்மை கொண்ட சுற்றுலா, உள்ளூர் வேலைவாய்ப்பு, இளைஞர்களின் திறன் மேம்பாடு மற்றும் சமூக பங்கேற்புக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மேற்கண்ட திட்டங்களின் கீழ் இதுவரை ரூ.390.74 கோடி மதிப்பிலான திட்டங்கள் ஒப்புதல் பெற்றுள்ளன. இதில் காஞ்சிபுரம் PRASHAD திட்டத்திற்கு ரூ.13.99 கோடி, மாமல்லபுரம் கடற்கரை கோயில் மேம்பாட்டிற்கு ரூ.30.02 கோடி, ராமேஸ்வரம், வேளாங்கண்ணி, நவகிரக கோயில்கள், ஊட்டி, சென்னை உள்ளிட்ட பல்வேறு சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்களும் இடம்பெற்றுள்ளன.

மேலும், 'பர்யடன் மித்ரா', 'பர்யடன் திதி' போன்ற திட்டங்கள் மூலம் பெண்கள் மற்றும் சமூகத்தின் பின்தங்கிய பிரிவினருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகவும், தமிழ்நாட்டில் 29,490 பேருக்கு சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறைகளில் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாகவும் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

காஞ்சிபுரம் எம்.பி. க. செல்வத்தின் துணைக் கேள்விகளுக்கு ஒன்றிய அரசு பதில்

இதனைத் தொடர்ந்து, க.செல்வம் எழுப்பிய துணைக் கேள்விகளில், ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட அனைத்து சமூக அடிப்படையிலான சுற்றுலாத் திட்டங்களும் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா? இல்லையெனில் தாமதத்திற்கான காரணங்கள் என்ன? என்று கேள்வி எழுப்பினார்.

மேலும், ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக பயன்படுத்தப்பட்டுள்ளதா? மாவட்ட வாரியாக நிதி பயன்பாடு மற்றும் அதன் பயன்கள் குறித்து ஒன்றிய அரசு மதிப்பீடு மேற்கொண்டுள்ளதா? என்றும் அவர் வலியுறுத்திக் கேட்டார்.

இந்தக் கேள்விகளுக்குப் பதிலளித்த சுற்றுலாத்துறை அமைச்சர், மாநில அரசுகளிடமிருந்து பெறப்படும் திட்ட அறிக்கைகள் மற்றும் வழிகாட்டு தல்களின் அடிப்படையில் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாகவும், நிலைத்த சுற்றுலா, உள்ளூர் வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் சமூகப் பங்கேற்பை வலுப்படுத்தும் நோக்கில் ஸ்வதேஷ் தர்ஷன் 2.0 திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு, தமிழ்நாட்டில் சுற்றுலா உள்கட்டமைப்பு மேம்பாடு, நிதி பயன்பாடு மற்றும் திட்டங்களின் செயலாக்கம் குறித்து காஞ்சிபுரம் எம்.பி. க.செல்வம் மக்களவையில் எழுப்பிய கேள்விகள் முக்கிய கவனம் பெற்றன.

இந்தக் கேள்வியின் மூலம் தமிழ்நாட்டில் சமூக அடிப்படையிலான சுற்றுலா மேம்பாடு, காஞ்சிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், நிதி ஒதுக்கீடுகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பான முக்கிய தகவல்கள் மக்களவையில் பதிவாகியுள்ளன.

தொடர்ந்து வரும் மேற்காசியப் போரினால் ஏற்படும்

பொருளாதாரத் தாக்கங்களைச் சமாளிக்க ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் ஏதேனும் உள்ளதா?

மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி,ஆக.1-

திராவிட முன்னேற்றக் கழக மேலவை உறுப்பினர் திரு எஸ். ஆர். சிவலிங்கம் அவர்கள், 28 ஜூலை 2026 அன்று, மாநிலங்களவையில் தொடர்ந்து நீடித்து வரும் மேற்குறிப்பிட்ட போரினால் இந்திய பொருளாதாரத்தில் ஏற்படும் தாக்கங்களை சமாளிக்க ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதா? என்றும் இறக்குமதி செலவு அதிகரித்துள்ளதை தடுக்க இயலுமா? என்றும் வர்த்தகத் துறை பாதிப்படைந்துள்ளதை அரசின் கவனத்தில் உள்ளதா? என்றும் ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் நிதித் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு :

இந்தியப் பொருளாதாரச் சந்தை, உலக பொருளாதாரச் சந்தையுடன் இணைந்து செயல்பட்டு வருவதால் இந்திய ரூபாயின் மதிப்பு 8 சதவீதம் அளவிற்கு வீழ்ச்சி அடைந்துள்ளது என்றும் ஆனால் மொத்தப் பொருளாதார உற்பத்தி பெருக்கம் கடந்த 3 ஆண்டுகளில் 7 சதவீத அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளது என்றும் தொழிற்துறை உற்பத்தி 5 சதவீத அளவிற்கு உயர்ந்துள்ளது என்றும் சிறுகுறு தொழில்களுக்கான கடன் வசதிகள் அதிகரித்துள்ளன என்றும் தடையில்லா வர்த்தக ஒப்பந்தங்கள் அதிகரித்துள்ளன என்றும் மாநிலங்களவையில் இணையமைச்சர் தெரிவித்தார்.

மேலும் அந்நிய செலாவணியை அதிகரிக்க தேவையான அனைத்து முயற்சிகளையும் இந்திய ரிசர்வ் வங்கி எடுத்துள்ளது என்றும் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் அளிக்கப்பட்டு வருவதாகவும், இந்தோனேஷியா, மாலத் தீவுகள் மற்றும் மொரிஷியஸ் நாடுகளுடன் பல்வேறு வர்த்தக ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும்,

மேற்காசியப் போரினால் ஏற்பட்ட வர்த்தக இழப்புகளை ஈடுகட்ட இரண்டு இலட்சம் கோடிகளுக்கும் அதிகமான அளவில் கடன் உறுதி திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் இந்திய பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்படவில்லை என்றும் ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி அவர்கள், மாநிலங்களவையில் தி.மு.க. மேலவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம் கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் எல்லாபுரம் வடக்கு ஒன்றியம் தண்டலம் வனத்தோட்ட காலனி கிளைக் கழக செயலாளர் து.பாஸ்கர் தாயார் ரோஜம்மாள் இயற்கை எய்தினார் தகவல் அறிந்த மாவட்ட கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் எல்லாபுரம் ஜெ.மூர்த்தி, ஒன்றியச் செயலாளர் சக்திவேல், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் தண்டலம் என். கிருஷ்ணமூர்த்தி உட்பட நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

டிஜிட்டல் இந்தியாவை பாதுகாக்க பலப்படுத்தப்பட்ட சைபர் கவசம் CERT–In நடவடிக்கை –

தகவல் சைபர் தாக்குதல்களை முறியடிக்க தேசிய அளவில் எடுக்கப்பட்ட தீவிர நடவடிக்கை என்ன?

மாநிலங்களவையில் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கேள்வி?

புதுடெல்லி, ஆக.1-

டெல்லியில் பாராளுமன்றத்தில் மாநிலங்களவை மழைக்கால கூட்டத்துடன் நடைபெற்று வருகிறது. இதில் கலந்து கொண்ட நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் டிஜிட்டல் இந்தியாவை பாதுகாக்க பலப்படுத்தப்பட்ட சைபர் கவசம் CERT-In நடவடிக்கை மற்றும் தகவல் சைபர் தாக்குதல்களை முறியடிக்க தேசிய அளவில் எடுக்கப்பட்ட தீவிர நடவடிக்கை என்ன? என கேள்வி ஒன்றை எழுத்துப் பூர்வமாக கேட்ப அதற்கு மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் பதிலளிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

AI சவால்களுக்கும் தயாராகும் இந்தியா சைபர் பாதுகாப்பில் புதிய வழிகாட்டுதல்கள் அமல்படுத்தப்பட்டன. இதனால் அரசு நிறுவனங்களுக்கு சைபர் பாதுகாப்பு மேலும் வலுப்படுத்தப்படுகிறது.

CERT-In நடவடிக்கைகள் குறித்து மாநிலங்களவையில் தகவல் சைபர் தாக்குதல்களை முறியடிக்க தேசிய அளவில் தீவிர நடவடிக்கை என்ன ? என கேள்வி எழுப்பினார்.

மேலும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பின்வருவனவற்றை தெரிவிப்பாரா:

அரசு நிறுவனங்கள் மீதான சைபர் தாக்குதல்கள் அதிகரித்துள்ளனவா? அப்படியென்றால், அது குறித்த விவரங்கள் என்ன;? இந்திய கணினி அவசரக்காலப் பதிலளிப்புக் குழு (CERT-In) சைபர் பாதுகாப்பு வழிமுறைகளை வலுப்படுத்தியுள்ளதா? இதற்கு ஒன்றிய அரசு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் என்ன? என கேள்வி எழுப்பினார்.

இதற்கு எழுத்துப் பூர்வமாக பதில் அளித்த மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் ஜிதின் பிரசாதா, நாட்டின் பயனர்களுக்கு வெளிப்படையான, பாதுகாப்பான, நம்பகமான மற்றும் பொறுப்புக்கூறக்கூடிய சைபர் வெளியை (cyberspace) உறுதி செய்வதை இந்திய அரசின் கொள்கைகள் நோக்கமாகக் கொண்டுள்ளன. அரசு நிறுவனங்கள் எதிர்கொள்ளும் பல்வேறு சைபர் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் சவால்கள் குறித்து அரசு நன்கு அறிந்து வைத்துள்ளது.

நாட்டில் சைபர் பாதுகாப்பு வழிமுறைகளை வலுப்படுத்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது; அவற்றில் அடங்குவன:

தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000-இன் பிரிவு 70B-இன் விதிகளின் கீழ், சைபர் பாதுகாப்புச் சம்பவங்களுக்குப் பதிலளிப்பதற்கான தேசிய முகமையாக இந்திய கணினி அவசரக்காலப் பதிலளிப்புக் குழு (CERT-In) நியமிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட நிறுவனங்கள், சேவை வழங்குநர்கள், ஒழுங்குமுறை அமைப்புகள் மற்றும் சட்ட அமலாக்க முகமைகளுடன் இணைந்து சம்பவங்களுக்கான பதிலளிப்பு நடவடிக்கைகளை CERT-In ஒருங்கிணைக்கிறது...

CERT-In-ஆல் செயல்படுத்தப்படும் தேசிய சைபர் ஒருங்கிணைப்பு மையம் (NCCC), சைபர் பாதுகாப்பு அச்சுறுத்தல்களைக் கண்டறிய சைபர் வெளியை ஆய்வு செய்கிறது. நடவடிக்கை எடுப்பதற்காக, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள், மாநில அரசுகள் மற்றும் பங்குதாரர் முகமைகளுடன் இது தகவல்களைப் பகிர்ந்து கொள்கிறது.

அச்சுறுத்தல்களை முன்கூட்டியே தணிப்பதற்காக, பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிறுவனங்களுடன் பிரத்யேக எச்சரிக்கைகளைப் பகிர்ந்துகொள்ளும் தானியங்கி சைபர் அச்சுறுத்தல் நுண்ணறிவுப் பரிமாற்றத் தளத்தை CERT-In இயக்குகிறது. சைபர் ஸ்வச்சதா கேந்திரா (CSK) CERT-In-ஆல் வழங்கப்படும் குடிமக்கள் சார்ந்த சேவை இது; இது 'ஸ்வச் பாரத்' (தூய்மை இந்தியா) திட்டத்தின் தொலைநோக்குப் பார்வையை சைபர் வெளிக்கும் விரிவுபடுத்துகிறது.

இது 'பாட்நெட்' (Botnet) சுத்தம் செய்தல் மற்றும் தீங்கிழைக்கும் மென்பொருள் (Malware) பகுப்பாய்வு மையமாகச் செயல்படுகிறது; இது தீங்கிழைக்கும் நிரல்களைக் கண்டறியவும், அவற்றை அகற்றுவதற்கான இலவசக் கருவிகளை வழங்கவும் உதவுகிறது.

அறிவுறுத்தல்கள், வழிகாட்டுதல்கள் மற்றும் உத்தரவுகள்

வேகமாக வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த இணைய அச்சுறுத்தல்களிலிருந்து டிஜிட்டல் உள்கட்டமைப்பைப் பாதுகாக்கும் நோக்கில், "டிஜிட்டல் உள்கட்டமைப்பில் AI-உதவியுடன் கூடிய பாதுகாப்பு ஓட்டைகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைக் குறைப்பதற்கும் தடுப்பதற்கும் ஆன வரைபடம்" (Blueprint) ஒன்றை மே 2026-இல் CERT-In வெளியிட்டுள்ளது.

மேம்பட்ட AI-சார்ந்த அச்சுறுத்தல்களுக்கு எதிரான பாதுகாப்பை வலுப்படுத்த நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் மேற்கொள்ள வேண்டிய விரிவான நடவடிக்கைகளை விவரிக்கும், "முன்னணி AI-சார்ந்த இணைய அபாயங்களை எதிர்கொள்ளுதல்" (Defending Against Frontier AI Driven Cyber Risks) என்ற தலைப்பிலான அறிவுறுத்தலை ஏப்ரல் 2026-இல் CERT-In வெளியிட்டுள்ளது.

மென்பொருள், வன்பொருள், செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் கம்ப்யூட்டிங் மற்றும் கிரிப்டோகிராபி (cryptography) ஆகியவற்றிற்கான 'பொருட்களின் பட்டியல்' (Bill of Materials - BOM) தொடர்பான புதுப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை ஜூலை 2025-இல் CERT-In வெளியிட்டுள்ளது.

ஜூன் 2023-இல், அரசு அமைப்புகளுக்கான தகவல் பாதுகாப்பு நடைமுறைகள் குறித்த வழிகாட்டுதல்களை CERT-In வெளியிட்டுள்ளது.

இவ்வழிகாட்டுதல்கள் தரவுப் பாதுகாப்பு, பிணையப் பாதுகாப்பு (network security), அடையாளம் மற்றும் அணுகல் மேலாண்மை, செயலிப் பாதுகாப்பு, மூன்றாம் தரப்பு அவுட்சோர்சிங், பாதுகாப்பு வலுவூட்டல் நடைமுறைகள், பாதுகாப்பு கண்காணிப்பு, பாதுகாப்புச் சம்பவ மேலாண்மை மற்றும் பாதுகாப்புத் தணிக்கை போன்ற அம்சங்களை உள்ளடக்கியுள்ளன.

பாதுகாப்பான மற்றும் நம்பகமான இணையச் சூழலை உறுதி செய்வதற்காக, தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000-இன் பிரிவு 70B-இன் உட்பிரிவு (6)-இன் கீழ், சைபர் பாதுகாப்பு தொடர்பான நடைமுறைகள், தடுப்பு நடவடிக்கைகள், சைபர் சம்பவங்களுக்கான எதிர்வினை மற்றும் அவை குறித்த அறிக்கை அளித்தல் ஆகியவை அடங்கிய சைபர் பாதுகாப்பு வழிகாட்டுதல்களை CERT-In ஏப்ரல் 2022-இல் வெளியிட்டுள்ளது என மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் ஜிதின் பிரசாதா பதில் அளித்துள்ளார்.

புரசைவாக்கம் பகுதி மகளிர் அணி முன்னாள் அமைப்பாளர்

திருமதி. சாந்தா பூபதி மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை,ஆக.1-

சென்னை கிழக்கு மாவட்டம் கொளத்தூர் தொகுதி மூத்த கழக முன்னோடி புரசைவாக்கம் தொகுதி ஒருங்கிணைந்த போது அதன் தொகுதி மகளிர் அணி அமைப்பாளராக இருந்த முன்னாள் தி.மு.க. புரசை பகுதி மகளிர் அணி அமைப்பாளர் திருமதி சாந்தா பூபதி வயது 78

அவர்கள் வயது மூப்பின் காரணமாக நேற்று (31.07.2026 வெள்ளிகிழமை) அதிகாலையில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்ததுடன் தெரிவித்து கொள்கிறோம்.

தகவல் அறிந்ததும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

அவரது இறுதி அஞ்சலி இன்று (01.08.2026 சனிக்கிழமை) காலை 10.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து (2/55, 11வது குறுக்குத் தெரு செந்தில் நகர் கொளத்தூர் சென்னை 99) புறப்பட்டு GKM காலனி கல்லறையில் நல் அடக்கம் நடைபெறும் என்பதை ஆழ்ந்த வருத்ததுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட வேளச்சேரி மேற்கு பகுதி 177வது வார்டில் வேளச்சேரி புவனேஸ்வரி நகரில் உள்ள 3வது பிரதான சாலையில் பெய்த பலத்த மழை காற்று காரணத்தினால் மரங்கள் வேரோடு சாய்ந்து விழுந்தன. இதை அறிந்த வார்டு மாமன்ற உறுப்பினரும், கழக தேர்தல் பணிக்குழு செயலாளருமான வேளச்சேரி பெ.மணிமாறன் நேரடியாக சென்று மாநகராட்சி ஊழியர்களுடன் இணைந்து மரங்களை அகற்றும் பணியில் ஈடுபட்டார். உடன் மாநகராட்சி அதிகாரிகள், பணியாட்கள், கழக நிர்வாகிகள், பெருந்திரளாக பங்கேற்றனர்.